வெள்ளையாறு, பாண்டையாறு என ஐந்து ஆறுகள் ஓடுகின்றன. இந்த ஐந்து ஆறுகளில் கிட்டத்தட்ட 650 கோடி ரூபாய் மதிப்பீட்டில் முதற்கட்டப்பணிகள் நடந்திருக்கின்றன. மாண்புமிகு நீர் வளத் துறை அமைச்சர் அவர்களை ஒருமுறை அதை நேரில் பார்வையிட வாருங்கள் என்று அழைத்தேன். வருவார் என்று எதிர்பார்க்கிறேன். ஆசிய வளர்ச்சி வங்கியின் நிதியுதவியோடும் அரசு நிதியுதவியோடும், நடைபெறுகிற இந்தப் பணியில் இரண்டாவது கட்டப் பணி எப்போது தொடங்கும் என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு நீர்வளத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. துரைமுருகன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்த வளவனாறு, அடப்பாறு, அரிச்சந்திரா ஆறு, வெள்ளையாறு, பாண்டையாறு என எல்லா ஆறுகளிலும் ஏற்கெனவே தடுப்பணை கட்டியிருக்கிறோம். மீதி இருக்கிற ஆறுகளில் தடுப்பணை கட்ட நடவடிக்கை எடுக்கப்படும். இப்போது ஏறக்குறைய ரூ.3,000 கோடி நிதியொதுக்கத்தை அரசு அனுமதித்து விட்டது. எனவே, நடப்பாண்டில் அந்தப் பணிகள் மேற்கொள்ளப்படும்.*

முற்பகல் 10–15

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 23, மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ். சுதர்சனம், மாண்புமிகு நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் அவர்கள்.*

23—

பெருநகர சென்னை மாநகராட்சியுடன் இணைத்தல்

***2788—திரு. எஸ். சுதர்சனம்:**

மாண்புமிகு நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மாதவரம் தொகுதி, செங்குன்றம் பேரூராட்சியை பெருநகர சென்னை மாநகராட்சியுடன் இணைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

[2022 மார்ச் 21

மாண்புமிகு திரு. கே.என் நேரு, நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) அரசு, தேவை மற்றும் அவசியத்தின் அடிப்படையில்,பெருநகர சென்னை மாநகராட்சியின் எல்லைகளை விரிவாக்கம் செய்வது குறித்து பரிசீலிக்கும் நேர்வில், உரிய ஆய்வு மேற்கொள்ளப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ். சுதர்சனம் அவர்கள்.

திரு. எஸ். சுதர்சனம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாதவரம் தொகுதிக்குட்பட்ட செங்குன்றம் பேரூராட்சியில் சுமார் 40,000 பேர் வசிக்கிறார்கள். செங்குன்றம் பேரூராட்சி பெரிய அரிசி விற்பனை செய்யும் தளமாக விளங்குகிறது. சென்னை மற்றும் பிற நகரங்களுக்கு இங்கிருந்துதான் அரிசி சென்று கொண்டிருக்கிறது. தினந்தோறும் நூற்றுக்கணக்கான கனரக வாகனங்கள் அங்கே வந்து செல்கின்றன. கர்நாடகா, ஆந்திரா போன்ற மற்ற மாநிலங்களிலிருந்து கனரக வாகனங்கள் மூலமாக அங்கே நெல் கொண்டுவரப்பட்டு, அங்கிருக்கக்கூடிய நூற்றுக்கும் மேற்பட்ட நவீன அரிசி ஆலைகளில் அவையெல்லாம் அரிசியாக்கப்பட்டு, மறுபடியும் பல்வேறு இடங்களுக்கு அரிசியாக எடுத்துச் செல்லப்படுகிறது. அந்தப் பேரூராட்சியில் தினந்தோறும் 12 டன் திடக் கழிவு ஏற்படுகிறது. அதுமட்டுமல்ல, வாகன போக்குவரத்தின் காரணமாக பல்வேறு சிரமங்கள் மக்களுக்கு ஏற்படுகின்றன. அந்த நகரமே போக்குவரத்து நெரிசல் அதிகமாக நிறைந்த நகரமாக இருக்கின்றது. ஆகவே, நிதியாதாரம் இல்லாத அந்தப் பேரூராட்சியை சென்னை மாநகராட்சியுடன் இணைத்து எல்லா வசதிகளும் செய்து தரப்படுமா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. கே.என். நேரு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே இதுபோல் ஒரு நேர்வு ஏற்பட்டு, ஒரு குழு அமைத்து, அந்தக் குழுவின் சார்பாகக் கிட்டத்தட்ட 25 ஊராட்சிகள், 9 நகராட்சிகள், 8 பேரூராட்சிகள் என்று நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இந்தத் துறையின் அமைச்சராகப் பொறுப்பேற்றிருந்தபோது சென்னை

2022 மார்ச் 21]

மாநகராட்சியை விரிவாக்கியதன் அடிப்படையில்தான் தற்போது 200 வார்டுகள் என அறிவிக்கப்பட்டு, தேர்தல் நடைபெற்றிருக்கின்றது. செங்குன்றம் பகுதியின் பழைய பெயர் நாரவாரிக்குப்பம் ஆகும். அதில் 40,000 மக்கள்தொகை இருக்கின்றது என்று சொல்லியிருக்கிறார்கள். அதனை ஆய்வுக்கு எடுத்துக்கொண்டு, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் அனுமதியையும் பெற்று, நிதிநிலைமைக்கேற்ப அந்தப் பகுதியை மாநகராட்சியுடன் சேர்ப்பதற்கு உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன். இப்போதுதான் உள்ளாட்சித் தேர்தல் முடிந்திருக்கிறது. ஊராட்சித் தேர்தல் முடிந்திருக்கிறது; நகர்ப்புறத் தேர்தலும் முடிந்திருக்கிறது. எனவே, சற்று தாமதமாகத்தான் பணிகள் நடைபெறும். உடனடியாகச் செய்ய இயலாது. அதனை உரிய முறையிலே, உரிய நேரத்தில் செய்வதற்கு அரசு ஆவன செய்யும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ். சுதர்சனம் அவர்கள்.*

திரு. எஸ். சுதர்சனம்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாதவரம் தொகுதிக்குட்பட்ட சோழவரம் ஒன்றியத்தில் பாடியநல்லூர் ஊராட்சியில் மக்கள்தொகை 42,300; அதேபோல் விஜயநல்லூர் ஊராட்சியில் மக்கள்தொகை 38,264; அலமாதி ஊராட்சியினுடைய மக்கள்தொகை 18,302; சோழவரம் ஊராட்சியினுடைய மக்கள்தொகை 15,250. இவ்வளவு மக்கள்தொகையுள்ள இந்த ஊராட்சிகளில் நிதியாதாரம் இல்லாததால் சாதாரண திடக் கழிவுகூட அகற்ற முடியாத நிலைமை. மற்ற அடிப்படை வசதிகளையெல்லாம் செய்து தர முடியாத ஒரு நிலைமை இருக்கிறது. இவை அனைத்தையும் ஒன்று சேர்த்து ஒரு நகராட்சியாகவோ அல்லது ஒரு பேரூராட்சியாகவோ அமைத்துத் தர முடியுமா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. கே.என். நேரு: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஊராட்சியாக இருக்கின்ற பகுதியைப் பேரூராட்சியாக மாற்றுகின்றபோது, அங்கிருக்கின்ற பொது மக்கள் அதனை விரும்புவதில்லை. காரணம், 100 நாள் வேலைத்*

திட்டம் அந்தப் பகுதியில் நடைபெறுகின்றது. பேரூராட்சியாக மாற்றப்படும்போது, அந்த 100 நாள் வேலைத் திட்டம் அங்கு நிறுத்தப்படும் என்ற காரணத்தினால் அந்தப் பகுதி மக்கள் அதை விரும்புவதில்லை.

நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கடந்த முறை சட்டமன்றத்தில் அறிவித்தார்கள். நகர்ப்புறத்திலும் இந்த 100 நாள் வேலைத் திட்டத்தினை உருவாக்குவதற்கு முதற்கட்டமாக 100 கோடி ரூபாய் ஒதுக்கி, 37 பேரூராட்சிகள், 7 நகராட்சிகள் மற்றும் 14 மாநகராட்சிகள், பெருநகர சென்னை மாநகராட்சியின் சில வார்டுகள் என்று எடுத்துக்கொள்ளப்பட்டிருக்கின்றன. குறிப்பாக, தமிழகம் முழுவதும் இருக்கின்ற பன்னிரெண்டாயிரத்திற்கும் மேற்பட்ட ஊராட்சிகளில் ஜனத் தொகை 30,000 முதல் 40,000 வரை இருக்கிறது. ஊராட்சி ஒன்றியக் குழு உறுப்பினர்களுக்கு 5,000 வாக்குகள் இருக்கின்றன. மாவட்ட ஊராட்சிக் குழு உறுப்பினருக்கு 50,000 வாக்குகள் இருக்கின்றன. இப்படி இருக்கின்றபோது 30,000, 40,000 என்று மக்கள்தொகை இருக்கிற அந்த ஊராட்சியைப் பேரூராட்சியாக மாற்றி, பேரூராட்சியில் அதிகமாக மக்கள்தொகை இருக்கின்றபோது நகராட்சியாக மாற்றி, நகராட்சிகளை இணைத்து மாநகராட்சியாக மாற்றுகின்ற பணியில், கடந்த ஆண்டு நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய அனுமதியைப் பெற்று, 28 நகராட்சிகள் புதிதாக உருவாக்கப்பட்டன; 6 மாநகராட்சிகள் உருவாக்கப்பட்டிருக்கின்றன. குறிப்பாக ஒன்றைச் சொல்ல விரும்புகிறேன். தாம்பரம் மாநகராட்சி உருவாக்கப்பட்டிருக்கின்றது. தாம்பரம் மாநகராட்சியில் நாங்கள் அரசுப் பணியைச் செய்வதற்கு இடம் கிடைப்பது என்பது மிகவும் சிரமமாக இருக்கின்றது.

முற்பகல் 10–20

தாம்பரம் மாநகராட்சியை ஒட்டியிருக்கிற ஊராட்சிகளை இதிலே இணைப்பது என முடிவு செய்யப்பட்டு, 4, 5 ஊராட்சிகள் தற்போது தாம்பரம் மாநகராட்சியோடு இணைக்கப்பட்டிருக்கின்றன. அங்கு தேர்ந்தெடுக்கப்பட்ட தலைவர்கள் இருக்கிறவரை அந்த ஊராட்சிகள் அப்படியே இருந்து, அந்தத் தலைவர்களின் பதவிக் காலம் முடிகிற நேரத்தில் அந்த ஊராட்சிகள் மாநகராட்சியோடு இணைக்கப்படுகின்றன. ஆனால், இப்பொழுது, அந்தப் பகுதிகளுக்கெல்லாம் தேவைப்படுகிற அடிப்படை வசதிகளைச் செய்து கொடுக்க வேண்டுமென்று நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் உத்தரவிட்டிருக்கிறார்கள். எனவே,

2022 மார்ச் 21]

புதிதாகச் சேர்க்கப்பட்டிருக்கிற பகுதிகளுக்கான பணிகளைத் தொடங்குவோம். (மேசையைத் தட்டும் ஒலி) எனவே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய ஆணையைப் பெற்று, மாநகராட்சியை ஒட்டியிருக்கிற 40,000 மக்கள்தொகை இருக்கிற பகுதிகளையெல்லாம் தரம் உயர்த்தலாமா என்பது பற்றி முடிவெடுக்கலாம் என்பதைத் தங்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. ச. சிவகுமார் அவர்கள்.*

திரு. ச. சிவகுமார்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மயிலம் சட்டமன்றத் தொகுதி, ஒரு நகராட்சியோ, பேரூராட்சியோ இல்லாத தொகுதியாக உள்ளது. மயிலம் தொகுதியில் உள்ள மயிலம் ஊராட்சியைப் பேரூராட்சியாகவும், அதேபோன்று, 10,000 வாக்குகள்கொண்ட ரெட்டணை ஊராட்சியைப் பேரூராட்சியாகவும் தரம் உயர்த்த அரசு முன்வருமா என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் வாயிலாக அறிய விரும்புகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. கே.என். நேரு: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு சென்று, ஒரு குழுவை அமைத்து, தமிழகம் முழுவதும் ஒவ்வோர் ஊராட்சியிலும் எவ்வளவு வாக்குகள் இருக்கலாம்; ஒன்றியத்திற்கு என்று வருகிறபோது, எத்தனை ஒன்றியக் குழு உறுப்பினர்கள் இருக்கலாம்; மாவட்ட ஊராட்சி என்று வருகிறபோது, மக்கள்தொகையின் அடிப்படையில் மாவட்ட ஊராட்சிகள் எவ்வளவு எண்ணிக்கையில் வைக்கலாம் என்பதை அறிந்து, சுமார் 12,000 எண்ணிக்கையில் உள்ள பஞ்சாயத்துகளில் மக்கள்தொகை அதிகமாக இருக்கிற பகுதிகளைப் பேரூராட்சியாகத் தரம் உயர்த்துவதற்குரிய ஆய்வை நடத்த மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய அனுமதியைப் பெற்று, ஒரு குழுவை அமைத்து, அந்தக் குழுவினுடைய பரிந்துரையை ஏற்று அதன்படி நடவடிக்கை எடுக்கலாம்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. A.P. நந்தகுமார் அவர்கள்.*

[2022 மார்ச் 21

திரு. A.P. நந்தகுமார்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எங்களுடைய வேலூர் மாவட்டத்தில் பல ஊராட்சிகள் இருக்கின்றன. குறிப்பாக, கொண்டசமுத்திரம் ஊராட்சியை எடுத்துக்கொண்டால் சற்றேறக்குறைய 19,000 வாக்காளர்களைக் கொண்ட ஊராட்சியாக இருக்கிறது. அந்த ஊராட்சியைப் பேரூராட்சியாக மாற்ற வேண்டுமென்ற கோரிக்கை வைத்திருந்தோம்.

அதேபோன்று, 2 அல்லது 3 ஊராட்சிகளை இணைத்து பேரூராட்சியாகவும், 2 அல்லது 3 பேரூராட்சிகளை இணைத்து நகராட்சியாகவும், 2 அல்லது 3 நகராட்சிகளை இணைத்து மாநகராட்சியாகவும் மாற்றும் திட்டம் ஏதும் அரசின் பரிசீலனையில் உள்ளதா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. கே.என். நேரு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அதற்காகத்தான் ஏற்கெனவே மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்டபோதே சொல்லியிருக்கிறேன். இதுகுறித்து மறு ஆய்வு செய்து, தமிழகம் முழுவதும் இருக்கிற ஒன்றியங்களை அதிகப்படுத்துவது, ஊராட்சிகளை அதிகப்படுத்துவது, பேரூராட்சிகளை அதிகப்படுத்துவது போன்ற கருத்துகளுக்கு குழுவின் மூலமாக அறிக்கையைப் பெற்று, அதைச் செய்யலாம். குறிப்பாக, வேலூர் மாநகராட்சியைப் பொறுத்தவரையில், தற்போது மாநகராட்சி தேர்தல் நடைபெற்றிருந்தாலும்கூட, அருகிலிருக்கிற 4, 5 பேரூராட்சிகளையும் வேலூர் மாநகராட்சியோடு இணைத்திருக்கிறோம். அதே திட்டத்தின்கீழ் இதைச் செய்யலாம். அதில் ஒரு சங்கடம் இருக்கிறது. இந்த 100 நாட்கள் வேலைத் திட்டம் என்று வருகிறபோது, அந்தப் பகுதிகளிலுள்ள மக்கள் அதற்கு எதிர்ப்புத் தெரிவிக்கிறார்கள். அதற்கென ஒரு வழியைக் கண்டபிறகுதான், இதைச் செய்ய முடியும் என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 24, மாண்புமிகு உறுப்பினர் திரு. க. செல்வராஜ், மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள்.